FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301697

1. District : திருவள்ளூர் மாவட்டம் PS: மோசூர் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பணி. காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 16/NDPS/2026 முத.அ. எண் Date: 14.10.2026 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: போதை தடுப்பு (நிகர்நீக்கம்) Sections பிரிவுகள்: 7(a), 8. 10.30 hrs.

(iii) Act சட்டம்: சட்டம் 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 06.03.2023 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.06.2025 Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 14.10.2026 Time : நேரம் 10.30 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் வியோனு விசாரணையின் பேரில் அடிப்படையில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 km, வடமேற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. மலர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் G. சந்திரசேகரன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் காவலர் அய்வாளர் (g) Address : முகவரி போதை தடுப்பு மற்றும் கண்காணிப்பு பணி, திருவள்ளூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) திருமதி. M. சசிலா, மேலாளர் கானிலை உதவியாளர்/ தட்டச்சர், மாவட்ட சமூகநல அலுவலகம், திருவள்ளூர்.
(2) திருமதி. S. சரண்யாதேவி, த/பெ சிங்காரவேலன், எண் 14, அய்யப்பன் நகர், மெயின் ரோடு, காமராஜ் நகர் அருகில், அலமாதி, சென்னை - 71.

8. Reasons for delay in reporting by the complainant/ Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதின் தாமதம்

06/2025/CYB/TVL -ன்படி வியோன விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and ~~took up the investigation~~ / directed ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

Inspector of police, VODC, Thiruvallur.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Mala 14/10/2016
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14.10.2016 at 11.30 hrs.

Name: பெயர் S. Mala,
Rank: நிலை Inspector of police,
VODC, Thiruvallur.

கனம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்கள், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் மாவட்டம் அவர்கள் முன்பாக சமர்ப்பிக்கப்படுகிறது.

திரு.L.பாலசெந்தில்முருகன் த/பெ.லஷ்மணன், புதிய எண் 12, பழைய எண். 168(B), 11-வது தெரு, லால்பகதூர் சாஸ்திரி தெரு, GKM காலனி சென்னை-82 என்பவர், 08.04.2024-ஆம் தேதி மின்னஞ்சல் மூலம், இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை அவர்களுக்கு அனுப்பிய புகாரின் பேரில் DE 61/2025/SW/TVL நாள்.03.06.2025 வாயிலாக விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அதன்படி விரிவான விசாரணை பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. புகார் மனுவில் கூறப்பட்டிருந்த குற்றச்சாட்டு தொடர்பாக S.மாலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் ஆகிய என்னால், விரிவான விசாரணை செய்யப்பட்டு, விசாரணையின் முடிவில் குற்றச்செயலுக்கான முகாந்திரம் உள்ளது கண்டறியப்பட்டது.

விசாரணையின் விபரம்

எதிரி-1 திருமதி.M.செல்வி, முன்னாள் இளநிலை உதவியாளர்/தட்டச்சர், பொறுப்பு பாதுகாப்பு அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் (17.09.2009 முதல் 04.09.2024 வரை) என்பவர், பிரிவு 2 (c) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம்-2018 ன் படி பொது ஊழியர் ஆவார். எதிரி-2 Dr.S.சரஸ்வதி த/பெ.செந்தில்முருகன், எண்.12, அய்யப்பன் நகர் மெயின் ரோடு, காமராஜ் நகர் அஞ்சல், ஆவடி, சென்னை-71 என்பவர் தனி நபர் ஆவார்.

புகார்தாரர் திரு.L.பாலசெந்தில்முருகன் அவர்களுக்கும் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி காமராஜ் நகரை சேர்ந்த சரஸ்வதி என்பவருக்கும் ஜூன் 2020 ஆம் ஆண்டு திருமணம் நடந்துள்ளது. இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து அவரவர்களது பெற்றோருடன் வசித்து வருகிறார்கள். குற்றம் சாட்டப்பட்ட நபர்-2 திருமதி.சரஸ்வதி அவர்கள் திருவள்ளூர் மாவட்டம் சமூகநல அலுவலகத்தில் தனது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் மீது குடும்ப வன்முறைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி 19.04.2021 ஆம் தேதியன்று மனு அளித்துள்ளார். மேற்படி புகார் தொடர்பாக சமூகநல அலுவலகத்தில் அப்போது பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்த பாண்டியம்மாள் அவர்கள் விசாரணை மேற்க்கொண்டு, அதன் பின்னர் குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அதன்மூலம் பார்த்துக்கொள்கிறேன் என்ற மனுதாரரின் கோரிக்கைப்படி மனு முடித்து

வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், 11.01.2023-ஆம் தேதியன்று திருமதி.சரஸ்வதி என்பவர் சமூகநல அலுவலகத்திற்கு நேரில் ஆஜர் ஆகி, தான் 19.04.2021-ல் பாதுகாப்பு அலுவலர் திருமதி.பாண்டியம்மாள் என்பவரிடம் புகார் அளித்ததாகவும் அதனை தொடர்ந்து 10.12.2021-ல் நடைபெற்ற விசாரணையின் போது தனது கணவர் விவாகரத்து வழக்கினை திரும்ப பெற்றுக்கொள்வதாகவும் தன்னுடன் சேர்ந்து வாழ விரும்புவதாக தெரிவித்ததால் அதனை நம்பி தான் நீதிமன்ற நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்ததாகவும், ஆனால் தன்னுடைய கணவர் ஒரு வருட காலமாக அதற்கான முயற்சி எதுவும் செய்யவில்லை என்றும் குழந்தைக்கான எந்தவித பராமரிப்பும் செய்யாததால், தன் புகார் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடிதம் அளித்துள்ளார். மேலும், தனது மனு தொடர்பான நடவடிக்கைகள் எடுப்பதற்காக, 06.03.2023 ஆம் தேதியன்று திருமதி.சரஸ்வதி அவர்கள் அவருடைய இந்தியன் வங்கி கணக்கு எண் 6692550474லிருந்து, அவருடைய தொலைபேசி எண்.8072398703ல் G-Pay மூலம், பொறுப்பு பாதுகாப்பு அலுவலர் பொறுப்பில் பணிபுரிந்த திருமதி.செல்வி அவர்களுடைய தொலைபேசி எண் 9444580640 மூலமாக அவருடைய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கணக்கு எண் 30670624727க்கு ரூ.1,000/- லஞ்சமாக பணம் அனுப்பியுள்ளார். அதன் பின்னர் திருமதி.செல்வி அவர்களால், 07.03.2023 ஆம் தேதியன்று மனுதாரர் சரஸ்வதி என்பவரின் மனு மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் பூந்தமல்லி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் நடவடிக்கை மேற்க்கொள்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி பூந்தமல்லி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, DVC வழக்கு எண்.6/2023 நாள் 23.03.2023 ன் படி பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது என தெரிய வருவதால், இக்குற்றச்சாட்டு தொடர்பாக குற்றச்சாட்டில் தொடர்புடைய நபர்கள், எதிரி-1 திருமதி.M.செல்வி, முன்னாள் இளநிலை உதவியாளர்/தட்டச்சர், பொறுப்பு பாதுகாப்பு அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் என்பவர் மீது லஞ்சமாக ரூ.1,000/- பணம் பெற்ற குற்றத்திற்காக பிரிவு 7(a) of the Prevention of Corruption Act as amended by the Prevention of Corruption Amendment Act 2018 ன் படியும், மற்றும் எதிரி-2 திருமதி.S.சரஸ்வதி த/பெ.செந்தில்முருகன், எண்.12, அய்யப்பன் நகர் மெயின் ரோடு, காமராஜ் நகர் அஞ்சல், ஆவடி, சென்னை-71 என்பவர் மீது லஞ்சமாக ரூ.1,000/- பணம் கொடுத்த குற்றத்திற்காக பிரிவு 8 of the Prevention of Corruption Act as amended by the Prevention of Corruption Amendment Act 2018-ன் படி குற்றச்சாட்டு புலனாகிறது.

இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை அவர்களின் குறிப்பாணை எண். DE 61/2025/SW/TVL நாள்.13.10.2026-ன் படி கொடுக்கப்பட்ட உத்தரவின்படி, இன்று 14.10.2026 காலை 10.30 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் குற்ற எண் 16/2026 U/s 7(a), 8 of the Prevention of Corruption Act as amended by the Prevention of Corruption Amendment Act 2018-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை, கனம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கும், நகல் ஒன்று காவல் கண்காணிப்பாளர், வடக்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது, மற்றொரு நகல் வழக்கு கோப்பில் வைக்கப்பட்டது.

14/10/2026

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.